DINAMANI

27 MAR 2022

PAGE 2

# புதுவை பல்கலை.யில் தேசிய கருத்தரங்கம்



கருத்தரங்கில் பேசிய துணை வேந்தர் குர்மீத் சிங்.

புதுச்சேரி, மார்ச் 26: புதுவை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சார்பில், 'இந்திய அறிவு முறைக்கு வட்டார இலக்கிய பாரம்பரியத்தின் பங்களிப்பு' என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்றது.

புதுவை பல்கலை. , சமூக அறிவியலுக்கான இந்திய அவையத்துடன் இணைந்து நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில், பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்து, , இந்திய அறிவுசார் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் முன்வைத்துப் பேசினார். நிகழ்ச்சியில் மனிதவியல் புல முதன்மையர் கிளெமெண்ட் லூர்து, ஆங்கிலத் துறை தலைவர் மார்க்ஸ், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் உஜ்வல் ஜனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DINAKARAN

27 MAR 2022

PAGE 5

# 31ம் தேதிக்குள் பிஎச்டி படிப்புக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தல்

புதுச்சேரி, மார்ச் 27: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நுழைவு தேர்வில் இருந்து விலக்களிக்கப்பட்ட பிஎச்டி படிப்புகளுக்கு மார்ச் 31ம் தேதிக்குள் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுவை பல்கலைக்கழகத்தில் நுழைவு தேர்வில் இருந்து விலக்களிக்கப்பட்ட பல்வேறுதுறைகளுக்கான ஆராய்ச்சி (பிஎச்.டி) படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் இணையவழி மூலம் கடந்த 11ம் தேதி முதல் கோரப்பட்டுள்ளது. இணையவழி மூலம் விண்ணப்பிக்க வரும் 31ம் தேதி கடைசி தேதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இதுதொடர்பாக கூடுதல் தகவலுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக அதிகாரப்பூர்வ இணையதளமான *www.pondiuni.edu.in/admission-2021-22/* மூலம் தெரிந்து கொள்ளலாம்.

DINAMALAR

27 MAR 2022

PAGE 5

# இணை பேராசிரியருக்கு துணை வேந்தர் பாராட்டு



நல்லாசான் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக இணைப் பேராசிரியரை, பல்கலை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, மார்ச் 27–**

நல்லாசான் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக இணைப் பேராசிரியரை பல்கலை துணை வேந்தர் பாராட்டினார்.

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் எட்டாம் ஆண்டு விழா, சென்னை நந்தம்பாகத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடந்தது. இவ்விழாவில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலத்தில் இணைப் பேராசிரியரான ரவிக்குமாருக்கு இவ்விழாவில் நல்லாசான் விருது வழங்கப்பட்டது.

மிகச்சிறந்த முறையில் ஆராய்ச்சியில் மாணவர்களை நெறிப்படுத்தியதற்காக ரவிக்குமாருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அவரை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.